பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள்.27.09.2019

**நிகழும் திருவள்ளுவராண்டு செப்டம்பர் மாதம் 30 ம் நாள் (30.09.2019) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்டப் பொருள்கள்**

| | |
|---|---|
| பொருள்.1 | பரமக்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களின் செப்டம்பர் 2019ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.2 | பரமக்குடி நகராட்சி பொறியாளர் அவர்களின் செப்டம்பர் 2019ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.3 | பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் செப்டம்பர் 2019 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.4 | பரமக்குடி நகராட்சி சுகாதார அலுவலர் அவர்களின் செப்டம்பர் 2019 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.5 | இந்நகராட்சியில் பணிபுரியும் திரு.கே.சுந்தரராஜன் (துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்) என்பவர் தன்னுடைய மகள் திருமணத்திற்காக திருமண மண்டபம் ரூ.10,000/– கோரியுள்ளார். அன்னாருக்கு திருமண முன்பணம் வழங்க மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.2365/2019/பி2) |
| பொருள்.6 | பரமக்குடி நகராட்சிக்கு உட்பட்ட 1 முதல் 36 வார்டு பகுதிகளில் தொழில் நடத்தி வரும் நபர்கள் 1992–1993 முதல் நீண்ட காலமாக தொழில்வரி செலுத்தாமல் நிலுவையுள்ளதால், மேற்படி தொகையினை செலுத்தாமல் உள்ள நபர்களுக்கு கேட்பு அறிவிப்பினை பதிவு அஞ்சலில் அனுப்ப வேண்டியுள்ளதால், அதற்கான உத்தேச செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.7 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் டெங்கு தடுப்பு பணிகள் போர்க்கால |

| | |
|---|---|
| | அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதனை தொடர்ந்து வீடுகள் மற்றும் தெருக்களின் வெளிப்புறங்களில் கொசுக்களில் உற்பத்தியை அழிக்கக் கூடிய பைரீத்திரம் 2% எக்ஸ்ட்ராக்ட் என்ற வகை மருந்து களப்பணி உதவியாளரின் அறிக்கையின் படி அலுவலக இருப்பில் மிக குறைவாக உள்ளதாகவும், மேற்கண்ட மருந்து ஒரு மாத காலத்திற்கு மட்டுமே பயன்படுத்தக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>அதன் பொருட்டு பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், நோய் தடுப்பின் முக்கியத்துவம் கருதியும் கீழ்கண்ட கொசு ஒழிப்பு மருந்தினை கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது.<br>பைரீத்திரம் 2% எக்ஸ்ட்ராக்ட் – 200 லிட்டர்<br>மேற்கண்ட கொசு ஒழிப்பு மருந்தினை டெங்கு காய்ச்சலை தடுக்கும் பொருட்டு பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், நோய் தடுப்பின் முக்கியத்துவம் கருதியும் நகர்மன்றத்தின் அனுமதி பெற்று தமிழ்நாடு மருத்துவ சேவை கழக அங்கீகாரம் பெற்ற நிறுவனமான பாராமவுண்ட் பெஸ்டிசைடு லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்திடமிருந்து ரூ. 2,50,000 உத்தேச செலவினத்தில் நேரடியாக கொள்முதல் செய்வதற்கு நகர் மன்றத்தின் அனுமதிக்கு<br><br>அலுவலகக் குறிப்பு–<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. தமிழ்நாடு மருத்துவ சேவை கழக அங்கீகாரம் பெற்ற நிறுவனமான பாராமவுண்ட் பெஸ்டிசைடு லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்திடமிருந்து ரூ. 2,50,000 உத்தேச செலவினத்தில் நேரடியாக கொள்முதல் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்<br>3. செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்<br><br>ந.க.எண்.783/2018/எச்2 |
| பொருள்.8 | தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோம்புத்துார் நிறுவனத்திற்கு பரமக்குடி நகராட்சியின் 2019–20ம் ஆண்டுக்கான நிர்வாக பங்குத் தொகை ரூ.50,000/–த்தை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கவும், மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.871/2017/சி1) |
| பொருள்.9 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள எமனேஸ்வரம் தரைப்பாலத்தில் உள்ள ஆழ்குழாய் கிணறு மூலம் நகரில் உள்ள வணிக நிறுவனங்களுக்கு ஏற்கனவே மாட்டு வண்டிகளுக்கு ரூ. 15/=ம், டிரல்லர் மற்றும் டிராக்டர்களுக்கு ரூ 60/=ம் வசூல் செய்யப்பட்டு வந்த நிலையில் மின் கட்டணம் மற்றும் ஊழியர்களின் ஊதியம் ஆகியவற்றில் ஏற்படும் செலவினம் நாளுக்கு நாள் அதிகமாகி கொண்டு வருவதால் மேற்கண்ட கட்டணங்களை மாற்றி அமைக்க ஆணையர் அவர்களின் அறிவுரையின்படி இந்நகர்மன்ற தீர்மான எண் 911 நாள்:–28.06.2019 ன் படி மாட்டுவண்டிகளுக்கு ரூ. 50/=ம் டிரல்லர் மற்றும் டிராக்டர்களுக்கு ரூ200/=ம் கூடுதலாக்கப் பட்டு 03.09.2019 முதல் வசூல் செய்ய உத்தரவும் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மாட்டுவண்டி உரிமையார்கள் கூட்டப்பட்ட கட்டணம் அதிகமாக உள்ளதால் தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக கூறி மனுக்கொடுத்து தண்ணீர் பிடிக்க வராத காரணத்தாலும், 03.09.2019ந் தேதி முதல் வசூல் ஏதும் வரப்படாததாலும், நகராட்சி வருவாய் நிதி இழப்பை தடுக்கும் பொருட்டு தண்ணீர் வண்டி உரிமையாளர்கள் கொடுத்துள்ள மனு ஆணையர் அவர்களால் பரிசீலிக்கப்பட்டு ஏற்கனவே உயர்த்தப்பட்ட கட்டணத்தை கீழ்கண்டவாறு மாற்றி அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>1) மாட்டு வண்டி 1க்கு ரூ 30.00<br>2) டில்லர் மற்றும் டிராக்டர் ஒன்றுக்கு ரூ 200.00 |

| | |
|---|---|
| | அலுவலகக் குறிப்பு— <br> மன்றம் அனுமதிக்கலாம், மேலும் நகராட்சி நிதி இழப்பு மற்றும் மாட்டு வண்டி தொழிலாளர்களின் நலன் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மாற்றி அமைக்கப்பட்ட கட்டணத்தை 06.09.2019 தேதி முதல் வசூல் செய்து வருவதையும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.10 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள மஞ்சள்பட்டினம் மயானத்தில் இயங்கி வந்த நவீன எரிவாயு தகன மேடையில் உள்ள இயந்திரங்கள் தொழில்நுட்ப காரணங்களால் இயங்காமல் இருந்து வந்தது. தற்போது பழுதடைந்த நிலையில் இருந்த உபகரணங்களை மாற்றி அமைக்கும் பணிக்கு உரிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் அனைத்தும் செய்து முடிக்கப்பட்டு விட்டது. அதன்படி பணிகள் செய்யும் பொழுது அகற்றப்பட்ட பழைய பழுதடைந்த பொருட்களை பொது ஏலத்திற்கு விட்டு அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. <br><br> அலுவலகக் குறிப்பு— <br> மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.11 | இந்நகராட்சிக்குட்பட்ட அலுவலக கணினி அறையில் உள்ள UPS மற்றும் பேட்டரிகள் வாங்குவதற்கு <br> ரூ. 2,80,000/— மதிப்பீட்டில் சரி செய்ய இந்நகர் மன்றம் தனது தீர்மான எண்— நாள் 31.08.2019—ல் ஒப்புதல் அளித்துள்ளதன்படி 05.09.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும். <br><br> 1) M/S கருணாம்பிகை இன்போ சிஸ்டம் & சர்வீஸஸ் சிவகங்கை — 0.06% மதிப்பீடு ரேட்டை விட குறைவு <br> 2) M/S S.K. எண்டர் பிரைசர்ஸ் கரூர் — 0.81 % மதிப்பீடு ரேட்டை விட அதிகம் <br> அலுவலகக் குறிப்பு— <br> மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் M/S கருணாம்பிகை இன்போ சிஸ்டம் & சர்வீஸஸ் சிவகங்கை நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீடு ரேட்டை விட 0.06% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக் கொள்ளலாம். |
| பொருள்.12 | இந்நகராட்சி பராமரிப்பில் நகர் பகுதிகளில் தெரு விளக்குகளுக்கு உரிய Switch Box பழுதடைந்ததை சரி செய்யும் பணிக்கு ரூ. 5,00,000/— மதிப்பீட்டில் செய்ய இந்நகர் மன்றம் தனது தீர்மான எண்— நாள் 30.08.2019—ல் அனுமதி அளித்ததின் பேரில் 05.09.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும், <br> 1) திரு S.S. Electrical Karaikudi - 0.10 % மதிப்பீடு ரேட்டை விட குறைவு <br> 2) திரு M. Ajantha Electricals Chennai - 0.54 %மதிப்பீடு ரேட்டை விட அதிகம் <br><br> அலுவலகக் குறிப்பு— <br> வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S S.S Electrical Karaikudi நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டை விட 0.10% குறைவாக இருப்பதால் அன்னாரது ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். |

| | |
|---|---|
| பொருள்.13 | இந்நகராட்சிக்குட்பட்ட தலைமை நீரேற்ற நிலையம் துணை நீரேற்ற நிலையங்கள், மேல்நிலைத் தொட்டி வளாகங்கள் ஆகியவற்றில் வால்வு தொட்டிகள் உடைந்த நிலையிலும், வால்வு தொட்டிகள் இல்லாத நிலையிலும் உள்ளன. மேலும் மேல்நிலைத் தொட்டிகளில் ஆள் இறங்கு குழிகள் மூடிகள் (Menhole Cover) முடாமல் உள்ளது. இதனால் உடைந்த வால்வு தொட்டிக்கள்,மற்றும் திறந்த பெரிய வால்வு தொட்டிகளில் மழைநீர் தேங்கி சுகாதாரக் கேடு ஏற்படக்கூடிய சூழ்நிலை உள்ளது. எனவே பொதுமக்களின் சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு மேற்படி வால்வு தொட்டிகள், சுவர்சிலாப்புகள் மற்றும் ஆள் இறங்கு குழி மூடிகள் புதிதாக அமைக்கும் பொருட்டு தயார் செய்யப்பட்ட உத்தேக மதிப்பீட்டுத் தொகை ரூ. 5,20,000/—க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு—<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.14 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்:- சந்தைப்பேட்டையில் உள்ள 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி திறந்த வெளியில் இருப்பதால் அந்நியர்கள் மேல்நிலைத் தொட்டியில் ஏறி முறையற்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். இதனால் மேல்நிலைத் தொட்டிக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மேல்நிலைத் தொட்டி வளாகத்தை சுற்றி சுற்றுச்சுவர் (Compound Wall) கட்ட வேண்டிய அவசியம் உள்ளது. மேற்கண்ட சுற்றுச்சுவர் கட்டும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 6,00,000/— க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு—<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.15 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.27 பாலன் நகர் மேற்கு பகுதியில் கடைசியில் உள்ள சுமார் 100 வீடுகளுக்கு பகிர்மானக் குழாய் உடைப்புகள் காரணமாக சீராக குடிநீர் வழங்க இயலவில்லை. மேலும் இரயில்வே கேட் அருகில் உள்ள பொன்னையாபுர மேல்நிலைத் தொட்டிக்கு நீரேற்றம் செய்யும் “10 மற்றும் 8”e1 பைப்புகள் பாலம் வேலையின் போது உடைந்து விட்டபடியால் நீரேற்றம் செய்யும் பணி பாதிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பைப்புகளுக்கு பக்கவாட்டில் கான்கீரீட் சுவர் அமைத்து பைப்புகளை பாதுகாக்கும் சூழ்நிலை உள்ளது. ஆகையால் மேற்கண்ட பகிர்மானக் குழாய்கள் அமைக்கும் பணிக்கும், கான்கீரீட் சுவர் அமைக்கும் பணிக்கும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 2,40,000/— க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு—<br>மன்றம் அனுமதிக்கலாம் |
| பொருள்.16 | இந்நகராட்சியின் பராமரிப்பில் உள்ள நகராட்சி உரக்கிடங்கில் சேகரிக்கப்பட்டு வரும் (வீட்டு அபாயகர கழிவுகள் மற்றும் மட்காத குப்பைகள்) போன்றவற்றை தனித்தனியாக பிரித்து வைக்கும் பொருட்டு வளம் மீட்பு மையம் அமைக்க ரூ 1,00,000/— மதிப்பீட்டில் சரிசெய்ய இந்நகர் மன்றம் தனது தீர்மான எண்— நாள் 31.08.2019—ல் ஒப்புதல் அளித்துள்ளதன்படி 05.09.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>1) திரு. S. சந்திரன் — 0.08%மதிப்பீடு ரேட்டை விட குறைவு<br>2) திரு M. சங்கர் — 1.15%மதிப்பீடு ரேட்டை விட அதிகம்<br>அலுவலகக் குறிப்பு—<br>வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு S. சந்திரன் ஒப்பந்தக்காரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீடு ரேட்டை விட 0.08% குறைவாக |

| | |
|---|---|
| | இருப்பதால் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.17 | தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பரமக்குடி நகராட்சியில் உள்ள சமுதாய கழிப்பறைகள் பரப்புரையாளர்கள் மூலம் தினசரி கண்காணிக்கப்பட்டு வருகிறது. கழிப்பறைகளை சரிசெய்து அமைக்கும் பணிக்கு ரூ 6.80 இலட்சம் மதிப்பீட்டில் சரிசெய்ய இந்நகர் மன்றம் தனது தீர்மான எண்– நாள்– 05.09.2019 அன்றின் படி அனுமதி அளித்ததால் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>1) திரு. S. சந்திரன் – 3.82%மதிப்பீடு ரேட்டை விட அதிகம்<br>2) திருமதி I. குழந்தையம்மாள் – 0.16%மதிப்பீடு ரேட்டை விட குறைவு<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் I. குழந்தையம்மாள் ஒப்பந்தக்காரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீடு ரேட்டை விட 0.16% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக் கொள்ளலாம். |
| பொருள்.18 | இந்நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப் பணிகள் குறித்த விளம்பரங்களை தொழில் மலரில் மாவட்ட ஆட்சியர் இராமநாதபுரம் சுவர்களின் அலுவலக கடித எண். 117/ செமதொ/2019 நாள்– 18.07.2019ன் படி வெளியிட்ட வகையில் மாலை முரசு மற்றும் தமிழ்முரசு நாளிதழ்களில் இருந்து கீழ்கண்ட விபரப்படி பட்டியல்கள் வரப்பெற்றுள்ளது.<br>1) மாலை முரசு தொழில்மலர் – ரூ 13650/–<br>2) தமிழ் முரசு தொழில்மலர் –ரூ 9900/-<br><br>மேற்கண்ட விபரப்படி தொகைகளை மேற்படி நிறுவனங்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.19 | சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண். 27061/2015/ யு.பி.ஏ–2, நாள். 01.07.2016– மற்றும் ந.க.எண். 38038/2013/யுபிஏ2, நாள். 03.01.2017ல் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் நகராட்சிகளில் உள்ள அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் உள்நோயாளிகளின் பாதுகாவலர் மருத்துவ மனையில் தங்குவதற்கு ரூ. 48.60 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள 30.11.2016ம் தேதிய மாநில திட்ட குழு கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு சென்னை, தலைமைப் பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 2829/2016/டிஓ2, நாள். 20.03.2017ன் படி தொழில்நுட்ப அனுமதி எண். 11/16–17 பெறப்பட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டது. |

இப்பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். 243 நாள். 29.06.2017ன்படி பரமக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் உள்நோயாளிகளின் பாதுகாவலர் மருத்துவமனையில் தங்குவதற்கு அரசு சாரா நிறுவனம் ''உதயம் பவுண்டேசன் பரமக்குடி'' மூலம் கட்டிட இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதியளிக்கப்பட்டு, இந்நிறுவனத்துடன் நகராட்சி தனி அலுவலர்மற்றும் ஆணையர் அவர்களின் தலைமையில் 25.09.2019 அன்று கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட நடவடிக்கைகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>கூட்ட நடவடிக்கைகள்</u>**

1. அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் உள்நோயாளிகளின் பாதுகாவலர் மருத்துவ மனையில் தங்குவதற்கு இடவசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்துக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

2. தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் அரசு மான்யம் பெறப்படும் வரை மேற்படி உறைவிடம் இயங்குவதற்கு தேவையான குடிநீர் மற்றும் மின் கட்டணம் ஆகியவற்றிற்கு நகராட்சியிலிருந்து செலுத்தப்படவேண்டும். அரசு மான்யம் பெறப்பட்ட பின்பு மேற்படி செலவினங்களுக்காக நகராட்சியிலிருந்து செலுத்தப்படும் தொகை நிறுத்தப்பட்டு அந்த தொண்டு நிறுவனம் மான்ய உதவி தொகையிலிருந்து மேற்படி செலவினங்களை மேற்கொள்ளவேண்டும்.

3. தொண்டு நிறுவனத்தால் கீழ்கண்ட பதிவேடுகள் பராமரிக்கப்படவேண்டும்.

    1) சொத்து விபர பதிவேடு (அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் விபரம்)
    2) கணக்கு பதிவேடு ( தினசரி வரவு செலவு கணக்கு பராமரித்தல்)
    3) வருகை பதிவேடு
    4) நியமன குழு கலந்தாய்வு கூட்ட பதிவேடு
    5) தன்பதிவேடு மற்றும் ஊதிய பதிவேடு
    6) பராமரிப்பு பதிவேடு
    7) புகார் பதிவேடு
    8) பார்வையாளர் பதிவேடு

4. தொண்டுநிறுவனம் உறைவிடத்தினை இயக்குவதற்கு கீழ்கண்ட பணியாளர்களை நியமனம் செய்யவேண்டும்.

    1) முழு நேர மேலாளர் – ஒரு நபர் ( பிரதி மாதம் ரூ. 15,000/– ஊதியம்)
    2) பாதுகாவலர்களின் உதவியாளர்கள் – இரண்டு நபர்கள் (பிரதி மாதம் ரூ. 10,000/– ஊதியம்)
    3) துப்புரவு பணியாளர்கள் ( தொண்டு நிறுவனத்தின் தேவைக்கேற்ப) (மொத்தமாக மாத செலவினம் ரூ. 15,000/–)

5. தொண்டு நிறுவனத்தினரால் அமர்த்தப்படும் பணியாளர்களுக்கு போதிய பயிற்சி அளித்து திறம்பட பணியாற்ற வைப்பது தொண்டுநிறுவனத்தின் பொறுப்பாகும்.

| | |
|---|---|
| | 6. நோயாளிகளின் பாதுகாவலர்களுக்கு அவசர உதவி தேவைப்பட்டால் அதுசமயம் பணியில் இருக்கும் உதவியாளர்கள் தொண்டுநிறுவனத்தின் மூலம் அருகில் உள்ள மருத்துவமனைக்கு செல்ல ஏற்பாடு செய்யவேண்டும்.<br><br>7. பிரதி மாதம் 5–ம் தேதிக்குள் தொண்டுநிறுவனம் உறைவிடத்தில் தங்க வரும் நோயாளிகளின் பாதுகாவலர்களின் பட்டியலை நகராட்சிக்கு அளிக்கும்பட்சத்தில் நகராட்சியானது பதிவேடுகளை ஆய்வு செய்து அதற்கான செலவினத்தை வங்கி வரைவோலையாக நிறுவனர் உதயம் பவுண்டேசன், 3/451, பாலன் நகர், பரமக்குடி என்ற பெயரில் வழங்கவேண்டும்.<br><br>8. நோயாளிகளின் பாதுகாவலர்கள் உறைவிடமானது 24 மணிநேரமும் வாரத்தின் 7 நாட்களும் (24x7) பயனாளிகள் வந்துசெல்வதற்கு ஏதுவாக திறந்து வைக்கப்படவேண்டும்.<br><br>9. ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக தலா12 நபர்கள் தங்குவதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஏதேனும் மாற்றங்கள் செய்ய விரும்பினால் நகராட்சியின் முன்அனுமதியோடு தொண்டு நிறுவனம் செயல்படவேண்டும்.<br><br>10. வணிக நோக்கத்தோடு மேற்படி கட்டிடம் பயன்படுத்தக்கூடாது. ஏதேனும் சூழ்நிலையில் தவறாக பயன்படுத்தப்படுவது கண்டறியப்பட்டால் முன்அறிவிப்பு ஏதுமின்றி ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்.<br><br>11. தொண்டு நிறுவனமானது நோயாளிகளின் பாதுகாவலர் தவிர பிற நபர்களை பிற நபர்களை தங்குவதற்கு அனுமதிக்ககூடாது.<br><br>12. தொண்டு நோக்கத்தோடு செயல்படவேண்டியிருப்பதால் பயனாளிகளை கட்டாயப்படுத்தி உறைவிடத்தில் தங்கவைக்க கூடாது<br><br>13. சட்ட விரோதமான செயல்கள் எதுவும் நடைபெற அனுமதிக்கக்கூடாது. ஏதேனும் சட்ட பிரச்சினைகள் ஏற்பட்டால் தொண்டுநிறுவனமே பொறுபேற்க வேண்டும்.<br><br>14. ஏற்கனவே மன்றத்தில் அனுமதித்துள்ளபடி நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு ரூ. 20/– பெற்றுக்கொண்டு தங்க அனுமதிக்கலாம். மேற்கண்ட தொகை ரூ. 20/– அய் செலுத்த இயலாத சூழ்நிலையில் உள்ள நோயாளிகளின் பாதுகாவலர்களை இலவசமாக தங்க அனுமதிக்கவேண்டும். அதற்கு தனியாக பதிவேடு பராமரிக்கப்படவேண்டும்.<br><br>15. உறைவிடத்தில் ஏதேனும் களவாடப்பட்டிருந்தாலோ அல்லது எந்த வகையிலும் சொத்துக்கு சேதம் விளைவிக்கப்பட்டிருந்தாலோ அதற்கு பராமரிக்கும் நிறுவனமே பொறுப்பாகும்.<br><br>16. உறைவிட காப்பக மேலாண்மை குழு காப்பகத்தின் நிகழ்வுகளை தினசரி கவனிக்கவேண்டும். மேலும், மேலாண்மை குழு கலந்தாய்வு கூட்டங்கள் மாதத்திற்கு இருமுறை கூட்டப்பட்டு நிகழ்வுகளின் கூட்ட நடவடிக்கைகள் தயார் |

செய்யப்படவேண்டும்.

17. காப்பகத்தின் வரவு செலவினங்களை பராமரிப்பதற்கு தனியான வங்கி கணக்கு ஆணையர் மற்றும் நிறுவனம் உதயம் பவுண்டேசன், 3/451, பாலன் நகர், பரமக்குடி ஆகிய இருவரது பெயரிலும் தொண்டு நிறுவனத்தின் கூட்டு கணக்காக துவங்கப்படவேண்டும். இது சம்மந்தமாக ஒவ்வொரு ஆண்டும் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டு நகராட்சிக்கு தெரிவிக்கவேண்டும்.

18. நகராட்சி காப்பகத்தின் செயல்பாடுகளை எந்தநேரத்திலும் ஆய்வு செய்யும் உரிமை உண்டு.

19. ஒவ்வொரு காலாண்டிற்கும் நகராட்சி மற்றும் தொண்டுநிறுவனம் இரண்டிற்கும் பணிகள் பற்றிய முன்னேற்ற அறிக்கை கலந்தாய்வு செய்யப்படவேண்டும்.

20. ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளை தவறும்பட்சத்தில் மூன்று மாத காலத்திற்குள் அறிவிப்பு வழங்கி ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்.

21. முதலாவது ஆண்டில் தொண்டு நிறுவனத்தின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு திருப்திகரமாக இருக்கும்பட்சத்தில் மட்டுமே தொடர்ந்து புதுப்பித்தல் செய்யப்படும்.

22. நிதிநிலைமை காரணமாகவோ, வேறு எந்த சூழ்நிலை காரணமாக மேற்படி காப்பகத்தை தொண்டுநிறுவனம் மூலம் இயக்க முடியாத நிலை ஏற்படுமேயானால் மூன்று மாதத்திற்கு முன்பாகவே நகராட்சிக்கு தெரிவிக்கப்படவேண்டும். நகராட்சி மூலம் புதிய தொண்டு நிறுவனம் நியமனம் செய்யப்படும்.

23. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தமானது 01.10.2019 முதல் 30.09.2020 வரை ஏற்புடையதாகும். ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் தொண்டு நிறுவனத்தின் செயல்பாடுகளை பொறுத்து நீட்டிப்பு செய்யப்படும். அல்லது தொண்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் வழிமுறைகளுக்கு புறம்பானதாக இருப்பின் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

24. நோயாளிகளுடன் உடன் தங்குபவர் உறைவிடத்தில் தங்க வரும்போது அரசு மருத்துவமனை அலுவலகத்திலிருந்து நோயாளியின் பெயர் மற்றும் நோயாளியின் பாதுகாவலரின் பெயர் அடங்கிய முறையான அனுமதி சீட்டினை பெற்று தங்க அனுமதிக்கவேண்டும்.

**அலுவலக்குறிப்பு..**

1) கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட நடவடிக்கை விபரத்தினை மன்றம் பதிவுசெய்யலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி முன்அனுமதி பெற்று பரமக்குடிஅரசு மருத்துவமனையில் உள்நோயாளிகளின் பாதுகாவலர்கள் மருத்துவமனையில் தங்குமிடம் கட்டப்பட்டுள்ளதை ''உதயம் பவுண்டேசன், 3/451, பாலன் நகர், பரமக்குடி'' தொண்டு நிறுவனம் மூலம் மேற்பார்வை மற்றும் பராமரித்தல் பணி

| | |
|---|---|
| | மேற்கொள்ள உத்திரவு வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.20 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள TN 65 W 9658 ஈப்பு வாகனம் பழுதடைந்ததை சரி செய்யும் பணிக்கு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் 26.08.2019 ந் தேதி உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளிகள் கோரப்பட்டத்தில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களில் இருந்து இரண்டு விலைப்புள்ளிகளின் வரப் பெற்றுள்ளது மன்றத்தின் அனுமதிக்கும்.<br><br>1. M/S PMK மோட்டார்ஸ் பரமக்குடி – ரூ. 15,090/–<br><br>2. M/S மதுரை மோட்டார்ஸ் மதுரை – ரூ.15,680/–<br><br>**அலுவலக்குறிப்பு..**<br><br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் M/S PMK மோட்டார்ஸ், பரமக்குடி நிறுவனம் கொடுத்துள்ள விலைப்புள்ளி விலை விகிதம் குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்று கொள்ளலாம். மேலும் அவசர அவசியம் கருதி நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரி, உத்தரவு வழங்கி பணி செய்து முடிந்ததையும் மன்றம் அனுமதிக்கலாம். |

பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள்.25.09.2019

**நிகழும் திருவள்ளுவராண்டு செப்டம்பர் மாதம் 25 ம் நாள் (25.09.2019) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டப் பொருள்**

பொருள். 1

பரமக்குடி நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2019–20ம் ஆண்டின் கீழ் மழையின் காரணமாகவும் குடிநீர் இணைப்புகள் மற்றும் குடிநீர் விநியோக குழாய்கள் மராமத்து பணிகள் மேற்கொண்டதில் ஏற்பட்ட பள்ளங்களை சீரமைக்கும் பணிக்கு கீழ்க்கண்டவாறு பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | நீளம் (கி.மீ) | | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| | | தார் சாலை | பேவர் கல் தளம் | |
| | **சிப்பம்.1** | | | |
| 1 | மஞ்சள் பட்டிணம் மெயின் ரோடு (நகராட்சிப் பள்ளி சந்திப்பு முதல் தேனா புதுக்கோட்டை சாலை சந்திப்பு வரை), ஜீவா நகர்– முதல் குறுக்குத் தெரு மற்றும் கிழக்குத்தெரு, வி.பி.நகர், பர்மா காலனி, ஆகிய தெருக்களில் பேவர் இயந்திரம் மூலம் தார்தளம் அமைத்தல் மற்றும் தர்மராஜபுரம் ,தேவராஜ் நகர் அண்ணா நகர்– குறுக்குத்தெரு, சத்தியமூர்த்தி தெரு மாதவன் தெரு, கன்னி சுந்தர்ராஜன் தெரு எம்.ஜி.ஆர் நகர்,பாண்டியன்தெரு – குறுக்குத் தெரு ஆகிய தெருக்களில் பேவர் கல்தளம் அமைத்தல் மற்றும் வடிகால் அமைத்தல் (வார்டு எண்.1,8,9,30,31,28 மற்றும் 20) | 1.424 | 1.647 | 200.00 |
| | **சிப்பம்.2** | | | |
| 2 | பொன்னையாபுரம், ஈஸ்வரன் கோவில் 4வது தெரு , மாமங்க தெப்பக்குளம் குறுக்குத் தெரு, கிறிஸ்துவகாலனி கிழக்கு முதல்தெரு ,கள்ளழகர்தெரு ஆகிய தெருக்களில் பேவர் கல்தளம் அமைத்தல் மற்றும் புது நகர் 2,3,4,5 வது குறுக்குத் தெருக்கள், வைகைநகர்–11 மற்றும் 12வது குறுக்குத் தெரு, பாலன்நகர் முதல்தெரு ,காளிதாஸ் பள்ளிதெரு,கிரி அம்பலம் நாராயணன் தெரு ஆகிய தெருக்களில் பேவர் இயந்திரம் மூலம் தார்தளம் அமைத்தல் மற்றும்வடிகால் அமைத்தல் (வார்டு எண்.27,28,4,2,8 ,15 மற்றும் 14) | 1.803 | 0.970 | 200.00 |
| | **சிப்பம்.3** | | | |
| 3 | எமனேஸ்வரம் பள்ளிவாசல் தெரு, சிங்காரதோப்பு மெயின் ரோடு, பெருந்தேவி நகர் குறுக்குத்தெருக்கள்,கோகுலர் தெரு,நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் ரோடு, அய்யாத்துரை தெரு கிழக்கு ,கீழத்தெரு,காட்டுப்பரமக்குடி சர்ச் ரோடு ஆகிய தெருக்களில் பேவர் இயந்திரம் மூலம் தார்தளம் அமைத்தல் மற்றும் முசாபர்கனி தெரு, ஜீவா நகர் மெயின் ரோடு மேற்கு முதல் குறுக்குத் தெரு , கக்கன் நகர், மட்டாமன்னா பாகவதர் சந்து, முனியாண்டிபுரம் ,காட்டுப்பரமக்குடி ஆதிதிராவிடர் காலனி மேற்கு குறுக்குத்தெரு, கௌரிஅம்மன் கோவில் – குறுக்குத்தெரு. எஸ்.எஸ்.காலனி, காந்திநகர் கடைசி தெரு பாரதியார்தெரு, காமராஜர் தெரு கிழக்கு ஆகிய தெருக்களில் பேவர் கல்தளம் அமைத்தல் (வார்டு எண்.3,32,21,19,24,2,8,36,29,25 ,26 மற்றும் 7) | 1.494 | 1.624 | 200.00 |
| | மொத்தம் | 4.721 | 4.241 | 600.00 |

அலுவலகக் குறிப்பு–1) மன்றம் அனுமதிக்கலாம் 2) மேற்படி தேர்வு செய்யப்பட்ட (3சிப்பம்) பணிகளுக்கு உரிய பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு சமர்பிக்கவும், மன்றம் அனுமதிக்கலாம்.

தனி அலுவலர்
பரமக்குடி நகராட்சி.